***கவனிக்க.-*** *2024.03.28 ஆந் திகதிய 2378 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி VI இன் ஆங்கிலப் பிரதியில் வெளியிடப்பட்ட மிருக வைத்தியர்களினதும் வைத்திய அலுவலர்களினதும் பெயர்ப்பட்டியலில் பதிவுத் திகதி 2020.07.02 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அது 2024.03.01 என திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2380 - 2024 අප්‍රේල් මස 10 වැනි බදාදා - 2024.04.10

*2380 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | *484* |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | *489* |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


***கவனிக்க.-*** *அல்- பலாஹ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2024, மாச்சு 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2024, மே மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

ஊவா மாகாண வீதி போக்குவரத்து சேவை அதிகார சபை வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டிய அறிவித்தல்

2001 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கமுடைய ஊவா மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின், 2019 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்கமுடைய ஊவா மாகாண வீதி போக்குவரத்து அதிகார சபையின் பகுதி 1 07(ஆ) பிரிவு பிரகாரம் மற்றும் பகுதி II 20 ஆம் பிரிவுகளின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய மற்றும் 2023.11.16 ஆந் திகதியிட்ட 6/ஊ/6/1 இலக்கமுடைய ஊவா மாகாண விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள், சுற்றுலா, போக்குவரத்து, கலாசார மற்றும் புடவைக் கைத்தொழில், சிறு கைத்தொழில் அமைச்சின் செயலாளரது கடிதத்தின் மூலமான கௌரவ ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்கு அமைய மற்றும் ஊவா மாகாண போக்குவரத்து சேவை அதிகார சபையின் பணிப்பாளர் சபையினால் UTA/DBD/2022/03/18 இலக்கத்தின் கீழ் 2022.09.15 ஆந் திகதி அனுப்பப்பட்ட முன்மொழிவுக்கு வழங்கப்பட்ட அனுமதியின் படி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கட்டணங்களை ஊவா மாகாண போக்குவரத்து சேவை அதிகார சபையின் நடவடிக்கைகளின் போது வர்தமானியில் வெளியிடப்படும் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என அனைத்து குடிமக்களும் அறிந்துகொள்வதற்காக இங்ஙனம் வெளியிடுகிறேன்.

கே. என். சுசில் குமார,
தலைவர்.

வீதி போக்குவரத்து அதிகார சபை,
ஊவா மாகாணம்.

**புதிய கட்டண திருத்தங்கள்**

| தொ. இல. | புதிய கட்டண திருத்தங்கள் | கட்டணங்கள் (ரூ.) |
|---|---|---|
| 1 | விசேட சுற்றுலா அனுமதிப்பத்திர கட்டண திருத்தங்கள் முதலாவது நாளுக்கு | 400.00 |
| | அதிகரிக்கும் ஒவ்வொரு நாளுக்கும் | 150.00 |
| 2 | பஸ் வண்டியை ஓம்னி ஆக்குவதற்கான கடிதங்களை வழங்குவதற்கு. | 2,000.00 |
| 3 | பஸ் வண்டி உரிமையாளரின் பிள்ளைகளுக்கு மாற்றுவதற்கு | 15,000.00 |
| 4 | திருமணமாகாத பிள்ளைகளுக்கு/மனைவியிடமிருந்து அல்லது கணவரிடமிருந்து மனைவிக்கு /கணவருக்கு மாற்றுதல் | 53,500.00 |
| 5 | பஸ் வண்டியை மாகணத்திலிருந்து விடுவிப்பதற்கு | 3,000.00 |
| 6 | புதிய வழித்தட அனுமதிப்பத்திரத்தை கோரும் போது விண்ணப்பப்பத்திர கட்டணமாக | 5,000.00 |
| 7 | சிசு செரிய புதிய அனுமதிப்பத்திரத்தை வழங்கும் போது அனுமதிப்பத்திர கட்டணமாக. | 150,000.00 |
| 8 | இவ்வதிகார சபையினால் வழங்கப்படும் செல்லுபடியாகும் வழித்தட அனுமதிப்பத்திரத்தை கொண்டுள்ள நபர் ஒருவர் சிசு செரிய வழித்தட அனுமதிப்பத்திரத்தை கோரும் போது. | 150,000.00 |
| 9 | சிசு செரிய சேவைக்காக உள்வாங்கப்படும் போது நிர்வாக கட்டணம் | 20,000.00 |
| 10 | வழித்தட அனுமதிப்பத்திர புத்தகம் காணாமல் போகும் சந்தர்ப்பத்தில் அதை மீண்டும் பெற்றுக்கொள்ளும் போது | 25,000.00 |
| 11 | லேபல் காணாமல் போகும் சந்தர்ப்பத்தில் மீண்டும் வழங்கும் போது | 7,500.00 |
| 12 | வழித்தட திருத்தம் | 125,000.00 |
| 13 | இருக்கைகளை ஒதுக்கும் போதான வருமானம் | 50.00 |
| 14 | பஸ் தரிப்பிப்பிட பூமியை ஒதுக்குவதற்கான கட்டணம் | 10,000.00 |

| தொ. இல. | புதிய கட்டண திருத்தங்கள் | கட்டணங்கள் (ரூ.) |
|---|---|---|
| 15 | தரிப்பிட கட்டணம் ( மாகாணங்களுக்கிடையிலான ) | 12,000.00 |
| 16 | பயணிகள் பாதுகாப்பு நிதியத்திற்காக (புதிய) | 500.00 |
| 17 | லொக்பத்திர கட்டணம் | 1,300.00 |
| | நுழைவுக் கட்டணம் | 1,560.00 |
| | துணை வீதி அனுமதிப்பத்திர கட்டணம் | 1,000.00 |
| | தாமத கட்டணம் (ஒரு வாரத்திற்கு) | 250.00 |
| 18 | ஓட்டுனர் அடையாள அட்டை கட்டணம் புதிதாக எடுப்பதற்கான கட்டணம் | 3,125.00 |
| | நீட்டிப்பதற்கான கட்டணம் | 1,875.00 |
| | தாமத கட்டணம் | 100.00 |
| 19 | நடத்துனர் அடையாள அட்டை கட்டணம் புதிதாக எடுப்பதற்கான கட்டணம் | 5,000.00 |
| | நீட்டிப்பதற்கான கட்டணம் | 3,000.00 |
| | தாமத கட்டணம் | 100.00 |
| 20 | * புதிய வழித்தட கட்டணங்கள் | |
| | 0-10 முஆ | 200,000.00 |
| | 11-20 முஆ | 250,000.00 |
| | 21-30 முஆ | 300,000.00 |
| | 31-40 முஆ | 350,000.00 |
| | 41-50 முஆ | 400,000.00 |
| | 50 முஆ க்கு மேல் | 500,000.00 |
| | சொகுசு பஸ் வண்டிகளுக்கு | 500,000.00 |
| 21 | * வழித்தட அனுமதிப்பத்திரத்தை மாற்றுவதற்கான கட்டணம் | |
| | 0-10 முஆ | 200,000.00 |
| | 11-20 முஆ | 250,000.00 |
| | 21 30 முஆ | 300,000.00 |
| | 31-40 முஆ | 350,000.00 |
| | 41-50 முஆ | 400,000.00 |
| | 50 முஆ க்கு மேல் | 500,000.00 |
| | சொகுசு பஸ் வண்டிகளுக்கு | 500,000.00 |
| | இதன் பின்னர் 05 வருடங்களுக்கு குறைவு/அதிகம் என வெவ்வேறாக கட்டணங்களை அறிவிடாமலிருக்க தீர்மானிக்கப்பட்டது.) | |
| 22 | * தற்காலிக அனுமதிப்பத்திர கட்டணங்கள் (ஒரு நாளைக்கு) | |
| | 0-10 முஆ | 400.00 |
| | 11-20 முஆ | 500.00 |
| | 21-30 முஆ | 600.00 |
| | 31-40 முஆ | 700.00 |
| | 41-50 முஆ | 800.00 |
| | 50 முஆ க்கு மேல் | 1000.00 |
| | மாகாணங்களுக்கிடையில் | 1500.00 |

| தொ. இல. | புதிய கட்டண திருத்தங்கள் | கட்டணங்கள் (ரூ.) |
|---|---|---|
| 23 | * வருடாந்த அனுமதிப்பத்திர கட்டணங்கள் | |
| | 0-10 முஆ | 10,400.00 |
| | 11-20 முஆ | 12,000.00 |
| | 21-30 முஆ | 14,000.00 |
| | 31-40 முஆ | 15,000.00 |
| | 41- 50 முஆ | 16,000.00 |
| | 50 முஆ க்கு மேல் | 17,000.00 |
| | சொகுசு பஸ் வண்டிகளுக்கு | 25,000.00 |
| | ஒரு நாளுக்கான தாமதக் கட்டணம் | 250.00 |
| 24 | * புதிய வழித்தட அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது வழித்தட ஆய்வு அறிக்கைக்கான கட்டணங்களை அறவிடல்(வழித்தட அனுமதிப்பத்திரம் அனுமதிக்கப்பட்டால் மாத்திரம்) | |
| | 0-10 முஆ | 10,000.00 |
| | 11-20 முஆ | 12,500.00 |
| | 21-30 முஆ | 15,000.00 |
| | 31-40 முஆ | 17,500.00 |
| | 41-50 முஆ | 20,000.00 |
| | 50 முஆ க்கு மேல் | 22,500.00 |
| | சொகுசு பஸ் வண்டிகளுக்கு | 25,000.00 |
| | * வழித்தடம் ஆரம்பமாகும் இடத்திற்கு செல்வதற்கும் வருவதற்கும் 1 மஅ க்கான பயணக் கட்டணம் | 150.00 |
| 25 | * மாகாண வழித்தட அனுமதிப்பத்திர வழித்தடத்தை நீடிப்பதற்கான கட்டணங்கள். | |
| | 0-10 முஆ | 15,000.00 |
| | 11-20 முஆ | 20,000.00 |
| | 21- 30 முஆ | 25,000.00 |
| | 31-40 முஆ | 30,000.00 |
| | 41-50 முஆ | 35,000.00 |
| | 50 முஆ க்கு மேல் | 40,000.00 |
| | சொகுசு பஸ் வண்டிகளுக்கு | 45,000.00 |
| 26 | பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து வண்டிகளை பதிவு செய்வதற்கான கட்டணம் (புதிய) | 10,000.00 |
| 27 | முச்சக்கரவண்டி உரிமத்தை பதிவு செய்வதற்கான கட்டணம் (புதிய) | 5,000.00 |
| 28 | தொழிற்சாலை சேவை வண்டிகளை பதிவு செய்வதற்கான கட்டணம் (புதிய) | 10,000.00 |
| 29 | காரியாலய சேவை வண்டிகளை பதிவு செய்வதற்கான கட்டணம் (புதிய) | 10,000.00 |
| 30 | பாடசாலை மாணவர் போக்குவரத்து உரிமத்தை புதுப்பிப்பதற்கான கட்டணம் (புதிய) | 5,000.00 |
| 31 | முச்சக்கரவண்டி உரிமத்தை புதுப்பிப்பதற்கான கட்டணம் (புதிய) | 500.00 |
| 32 | தொழிற்சாலை சேவை உரிமத்தை புதுப்பிப்பதற்கான கட்டணம் (புதிய ) | 5,000.00 |
| 33 | காரியாலய சேவை உரிமத்தை புதுப்பிப்பதற்கான கட்டணம் (புதிய ) | 5,000.00 |
| 34 | பஸ் வண்டிகளை பரிமாற்றுவதற்கான கட்டணம் மாகாணத்திற்குள் | 5,000.00 |

| தொ. இல. | புதிய கட்டண திருத்தங்கள் | கட்டணங்கள் (ரூ.) |
|---|---|---|
| 35 | பஸ் வண்டிகளை பரிமாற்றுவதற்கான கட்டணம் மாகாணங்களுக்கிடையில்/ நுழைவு | 10,000.00 |
| 36 | வழித்தட உரிமங்களை நீடிப்பதற்கான வருவாய் மாகாணங்களுக்கிடையில்/ நுழைவு | 20,000.00 |
| 37 | தற்போதுள்ள வழித்தட உரிமத்தை வேறு சேவைளுக்கு உள்ளடக்குவதற்கான கட்டணம் (சிசு செரிய /நிசி செரிய/செமிசெரிய) | 50,000.00 |
| 38 | பருவக்கால பயணச்சீட்டு கட்டணங்கள் | 2,500.00 |
| 39 | பயணச்சீட்டு புத்தகம் | 750.00 |
| 40 | லீசிங் வசதிகளை பெற்றுக் கொள்வதற்காக கடிதமொன்றை வழங்குவதற்கான கட்டணம் (புதிய) | 500.00 |
| 41 | நாளாந்தம் பயணிக்கும் பஸ் வண்டிகளின் மூலம் மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய பஸ் வண்டி நிறுத்துமிட கட்டணம் (ஒரு நாளுக்கு) (புதிய ) | 25.00 |

**வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபை**

**போக்குவரத்து அமைச்சு - ஊவா மாகாணம்**

**அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியொருவரினால் வழங்கப்படும் தற்காலிக அனுமதிப்பத்திரம்.**

உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி : ................................................................. அனுமதிப்பத்திர இலக்கம் : ........................................................................................................................ தொலைபேசி இலக்கம் :.......................................... வழித்தட இலக்கம் ................................... இல் பயணிக்கும் இலக்கம் .................................................... கொண்ட பயணிகள் போககுவரத்து வண்டியை பரிசோதனை செய்த போது அவதானிக்கப்பட்ட கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள I ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள தவறுகள் தொடர்பாக II ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள ஆவணங்கள் அதிகார சபையின் பொறுப்பில் எடுக்கப்படும்.

பந்தி I

| தொ. இல. | I ஆம் நிரல் - கண்டறிப்பட்ட தவறுகள் | கட்டணங்கள் (ரூ.) |
|---|---|---|
| 1 | 01. செல்லுபடியாகும் பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தை வைத்திருக்க தவறியது | 3,500.00 |
| 2 | அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்து பயணம் செய்தல் | 5,000.00 |
| 3 | பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட பயண வழித்தடத்தை விட்டு மாறுபட்டு பயணித்தல்(நியாயமான காரணமென்றால் 03 நாட்களுக்குள் அதிகார சபைக்கு அறிவிக்க வேண்டும்) | 7,500.00 |
| 4 | சேருமிடம் வரை பயணிக்காமல் இடையில் மீண்டும் திருப்பி பயணித்தல் | 15,000.00 |
| 5 | பணிகள் போக்குவரத்துக்காக அதிகாரமளிக்கப்படாத பஸ் வண்டியொன்றை பயன்படுத்துதல் | 200,000.00 |
| 6 | பராமரிக்கப்பட வேண்டுமென அதிகாரசபையினால் கட்டளையிடப்பட்டுள்ள ஆவணங்களை பரிசோதனைக்காக அவசியமான நேரத்தில் சமர்ப்பிக்க தவறுதல் | 4,000.00 |
| 7 | பஸ் வண்டியை நிறுத்துமாறு அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியொருவரினால் சைகை செய்யும் போது நிறுத்தாமல் பயணித்தல் | 5,000.00 |
| 8 | அனுமதிக்கப்பட்ட கால அட்டவணையை பின்பற்ற தவறுதல் | 5,000.00 |

| தொ. இல. | புதிய கட்டணத்திருத்தம் | கட்டணங்கள் (ரூ.) |
|---|---|---|
| 9 | அறவிடப்படும் பணத்திற்கு பயணச்சீட்டை பயணிகளுக்கு வழங்குவதை தவிர்த்தல், பயணச்சீட்டுக்கு குறைவான பணத்தை அறவிடல் அல்லது அதிகமாக அறவிடல் (நடத்துனர்) | 5,000.00 |
| 10 | வழித்தட இலக்கம், ஆரம்பிக்கும் இடம், சேருமிடத்தை பஸ் வண்டியின் முன்பக்கம், பின்பக்கத்தில் காட்சிப்படுத்த தவறுதல் | 5,000.00 |
| 11 | சொகுசு பேருந்துகளில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை மீறி பயணிகளை கொண்டு செல்லல் (ஒரு பயணிக்கு ) | 1,000.00 |
| 12 | செல்லுபடியாகும் நடத்துனர் அனுமதிப்பத்திரம் /ஓட்டுனர் அடையாள அட்டையை வைத்திருக்காமல் இருப்பது | 2,500.00 |
| 13 | மாதாந்த சேவை கட்டணத்தை செலுத்த தவறுதல் | 5,000.00 |
| 14 | அனுமதிப்பத்திர லேபலை முன்பக்க வின்ட்ஸ்கீரினில் 4 காட்சிப்படுத்தாமை | 1,000.00 |
| 15 | வேறுபட்ட சேருமிடங்களுக்கு ஒரே பெறுமதியை காட்டும் பயணச்சீட்டுகளை வழங்குதல் | 2,500.00 |
| 16 | அறவிடப்படும் கட்டண சுழற்சியை காட்சிப்படுத்தாமை | 2,500.00 |
| 17 | அனுமதிக்கப்பட்ட இருக்கை எண்ணிக்கையை காட்சிப்படுத்தாமை | 1,000.00 |
| 18 | முன்பக்க வின்ட்ஸ்கீரினுக்கு மேலே பஸ் வண்டியின் பதிவு இலக்கத்தை காட்சிப்படுத்தாமை | 1,000.00 |
| 19 | பஸ் வண்டியினுள் மணி ஒன்றை பொருத்தாமல் இருத்தல் | 1,000.00 |
| 20 | மதகுருமாருக்கு, ஊனமுற்றாருக்கு மற்றும் கர்ப்பிணி பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட இருக்கைகளை காட்டும் அறிவிப்புகளை காட்சிப்படுத்தாமை | 1,000.00 |
| 21 | நடத்துனரால் வழங்கப்படும் செல்லுபடியாகும் பயணச்சீட்டை சேருமிடம் வரை பயணி வைத்திருக்காவிட்டால் பயணக்கட்டணத்தின் இருமடங்கை அறவிடல் | 1,000.00 |
| 22 | விசேட சுற்றுலா அனுமதிப்பத்திரம் இல்லாமல் பயணித்தல் | 2,000.00 |
| | I . அதிக சத்தத்துடன் வானொலி, தொலைகாட்சியை செயற்படுத்துதல்( 80db க்கு மேல்) | 5,000.00 |
| | II. அநாகரீக மான காட்சிகள் அடங்கிய காணொளிகளை காண்பித்தல் | 15,000.00 |
| | III. கையடக்க தொலைபேசியை பாவித்துக்கொண்டு வாகனம் ஓட்டுதல் | 10,000.00 |

# பதவி வெற்றிடங்கள்

**மத்திய மாகாண மாகாண சபையின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

**மத்திய மாகாண மாகாண அரசாங்க சேவையில், நிறைவேற்று சேவைப் பிரிவில் இரசாயனவியலாளர் பதவியில் நிலவும் வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரல் -2024**

கண்டி மாநகர சபையில் நிறைவேற்று சேவைப் பிரிவில் உள்ள இரசாயனவியலாளர் பதவியில் நிலவும் வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஒப்பந்த அடிப்படையில் தகைமையுடைய உத்தியோகத்தரை ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2023.12.31 ஆந் திகதியன்று கீழ் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள, ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **தகைமைகள் :**

1.1 **பொதுத் தகைமைகள் :**

1.1.1. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

1.1.2. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய 03 வருடங்கள் தொடர்ச்சியாக கண்டி மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிரந்தர வதிவுடையவராக இருத்தல் வேண்டும்

1.1.3. சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

1.1.4. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.1.5. 2023.12.31 ஆந் திகதியன்று 21 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதாவது 2002.12.31 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக, 1988.12.31 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு பின்னரான திகதியை பிறந்த திகதியாக கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பிக்கலாம்)

1.2 **கல்வித் தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது உயர் கல்வி விடயப் பொறுப்பு அமைச்சினால் பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ள உயர் கல்வி நிறுவனம் ஒன்றிலிருந்து

(அ) இரசாயனவியல் உள்ளடங்களான விஞ்ஞானமானி சிறப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்,

அல்லது

(ஆ) இரசாயனவியல் உள்ளடங்களான விஞ்ஞானமானி பொதுப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்,

அல்லது

(இ) இரசாயனவியல் உள்ளடங்களான விஞ்ஞானமானி முதுகலைப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு** :- இங்கு குறிப்பிட்டுள்ள பட்டம் உள்ளடங்களான அனைத்து தகைமைகளையும் 2023.12.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

02. **கொடுப்பனவு**

2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம், SL-01–2016 சம்பள அளவுத் திட்டத்திற்கமைய ரூபா. 47,615/- அடிப்படைச் சம்பளம் நியமனம் செல்லுபடியாகும் திகதியிலிருந்து செலுத்தப்படும்.

இதற்கு மேலதிகமாக அரசினால் அரச அலுவலர்களுக்கு காலத்திற்கு காலம் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்

03. **சேவை நிபந்தனைகள் :-**

3.1 மத்திய மாகாண அரசாங்க சேவையில் நியமனங்கள் நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், 2023.05.30 ஆம் திகதி மத்திய மாகாண ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்ட மத்திய மாகாண அரசாங்க சேவையில் கண்டி மாநகர சபையில் நிறைவேற்று சேவைப் பிரிவில் இரசாயனவியலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் நிபந்தனைகள், அத்திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட, இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

3.2 ஒரு வருட கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்நியமனம் வழங்கப்படுவதால், ஒரு வருட காலத்திற்கு மட்டுமே இந்நியமனம் செல்லுபடியாவதுடன், தேவையேற்படின் எந்த நேரத்திலும் இந்நியமனத்தினை இரத்து செய்வதற்கான அதிகாரம் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரித்துடையது.

04. **ஆட்சேர்ப்புமுறை**

4.1 விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் தகைமையுடைய விண்ணப்பதாரர்களுக்காக நடாத்தப்படும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில், மத்திய மாகாண ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு, அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர் இவ்வெற்றிடப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்.

(அங்கீகரிக்கப்பட்ட புள்ளிகள் வழங்கும் திட்டம் www.psc.cp.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

குறிப்பு : - தகைமைகளை உறுதிப்படுத்தும் அனைத்து சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன், தேசிய ஆளடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

05. **விண்ணப்பிக்கும் முறை**

- முறையாகவும் சரியாகவும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2024.05.03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் "செயலாளர், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு, இல. 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

- விண்ணப்பத்தினை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "மத்திய மாகாண அரசாங்க சேவையில், இரசாயனவியலாளர் பதவியில் நிலவும் வெற்றிடத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரல்" எனத் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

- விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் மற்றும் பூரணமின்றி கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் உரிய திகதியன்று அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

- தாமதமாக கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் தொலைந்த விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகளை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு பொறுப்பேற்க மாட்டாது.

(மாதிரி விண்ணப்பப்படிவத்தை www.psc.cp.gov.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்)

06. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன் ஆட்சேர்ப்பு அறிவிப்பினை நன்றாக வாசித்து விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

07. இவ் ஆட்சேர்ப்பு சம்பந்தமாக இங்கு குறிப்பிடாத ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவைச் சார்ந்ததாகும்.

08. இதன் சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கில மொழிகளிலுள்ள அறிவித்தல்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

கை/இ: குமுதினி எஸ். பிரேமசந்திர,
செயலாளர்,
மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,

மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி.
2024 ஏப்பிறல் 04.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**மத்திய மாகாண அரசாங்க சேவையில், நிறைவேற்று சேவைப் பிரிவில் இரசாயனவியலாளர் பதவியில் நிலவும் வெற்றிடத்திற்கு ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் -2024**

இலக்கம் :- [ ]

(அலுவலக உபயோகத்திற்கு)

வதிவிட மாவட்டம் :- [ ]

01.

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :- ....................................................................................
Mr./Mrs./Miss (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
(உதா:- SILVA A.B.C.D.)

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் :-....................................................................................
திரு./திருமதி/செல்வி (சிங்களம்/தமிழில்)

1.3 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :- ..................................
....................................................................................................................

1.4 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (சிங்களம்/தமிழில்) :-... ..............................................
....................................................................................................................

02. 2.1 நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழில்) :- ..............................................................................
....................................................................................................................

2.2 அழைப்புக் கடிதம் அனுப்ப வேண்டிய முகவரி (சிங்களம்/தமிழில்) :-................................................
....................................................................................................................

2.3 அழைப்புக் கடிதம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்):- ..................................
....................................................................................................................

2.4 தற்போது அரச சேவையில் உள்ளவராயின் அலுவலக முகவரி :- ..............................................

.................................................................................................................

2.5 தேசிய ஆளடையாள அட்டை இல :- [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

2.6 பால்:- 0 - ஆண் , 1- பெண் [ ]

03. 3.1 பிறந்த திகதி:- [ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

3.2 2023.12.31 திகதியன்று வயது:- வருடங்கள்: ........... மாதங்கள் ........... நாட்கள் ..............

3.3 கையடக்கத் தொலைப்பேசி இலக்கம்:- [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

04. திருமணநிலை :- [ ]

திருமணமாகாதவர் - 1 திருமணமானவர் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

05. 5.1 விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டம்:- ...............................................................

| வாக்காளர் இடாப்பு பட்டியலின் அடிப்படையில் | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| தேர்தல் மாவட்டம் | | | |
| தேர்தல் தொகுதி | | | |
| வாக்காளர் பிரிவு | | | |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. | | | |
| வீட்டு இல. | | | |
| பெயருக்கு முன்னாலுள்ள தொடரிலக்கம் | | | |

06.

6.1 கல்வித் தகைமைகள்:-

| பல்கலைக்கழகம்/ நிறுவனத்தின் பெயர் | பெற்றுள்ள பட்டம் அல்லது சித்தியடைந்த பரீட்சை | பட்டம் அல்லது குறித்த பரீட்சையில் கற்ற பாடங்கள் | பெற்ற வகுப்புத் தேர்ச்சி | சான்றிதழ் இலக்கமும் பட்டம் அல்லது சித்தியடைந்த பரீட்சையின் செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|---|
| | | | | |

6.2 ஏனைய தொழில்சார் தகைமைகள் :- .....................................................................................

.................................................................................................................

.................................................................................................................

07. விண்ணப்பதாரர் தொழில் புரிபவராயின் அது தொடர்பான விபரங்கள் விவரங்கள் (பொருத்தமெனின்):-

| திணைக்களம்/நிறுவனம் | வகிக்கும் பதவி | காலம் | | ஆண்டுச்சம்பளம் |
|---|---|---|---|---|
| | | இலிருந்து | வரை | |
| | | | | |

08 . நீதிமன்றமொன்றில் ஏதாவது தவறுக்காகக் தண்டனை பெற்றுள்ளீரா ? ஆம்/இல்லை

ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிவும்.

.......................................................

**விண்ணப்பதாரியின் உறுதியுரை**

09. இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை எனவும் சரியானவையெனவும் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதாவது விபரங்கள் தவறாகக் காணப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னர் நான் தகுதியற்றவனாவேன் என்றும் தவறு நியமனத்திற்கு பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

.................................... ............................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

10. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .......................................... என்பவர் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரிந்தவர் எனவும் இன்றைய திகதி அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

குறிப்பு - விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், கோட்டத்தின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, முப்படைகளின் கட்டளை அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், ரூபா 498,960/- இற்கு கூடிய ஆண்டுச் சம்பளத்தை பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர், அல்லது பௌத்த விகாராதிபதி, மகாநாயக்கர்கள் மற்றும் ஏனைய மதத் தலைவர்கள் அல்லது மதத் தலைவராகக் கருதப்படும் ஒருவரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்

...................................................
அத்தாட்சிப்படுத்தியவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்தியவரின் முழுப்பெயர் : .................................

பதவி : ..................................................

முகவரி : ..................................................

திகதி : ..................................................

(உத்தியோக முத்திரையால் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

11. தற்போது அரச அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ளவர்கள் தமது கையொப்பத்தை திணைக்களத் தலைவர் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி .............................................. என்பவர் இத்திணைக்களத்தில்/ நிறுவனத்தில் .................................................... ஆக கடமையாற்றுகிறார். கடந்த 05 வருட காலப்பகுதியில் அவர் எந்த விதமான ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என்பதை தெரிவிப்பதுடன் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படின் அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்றும் ஒப்புதல் அளிக்கின்றேன்.

..................................................
திணைக்கள/நிறுவனத் தலைவரின்
கையொப்பமும் உத்தியோக பூர்வ முத்திரையும்

திகதி : ..................................................

04-240